## நிதி அமைச்சு
## இலங்கைச் சுங்கம்

சுங்க பிரதான பரிசோதகர்கள் மற்றும்
சுங்கப் பரிசோதகர் (தரம் 1) அவர்களுக்கு

### சுங்க உதவி அத்தியட்சகர் தரம் 11 ஆம் பதவிக்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2017

விண்ணப்பங்களானது பின்வரும் அலுவலர்களிடமிருந்து கோரப்படுகின்றன :

அ) சுங்க பிரதான பரிசோதகர்கள் அல்லது
ஆ) சுங்கப் பரிசோதகர் தரம் 1 இல்02 வருடங்கள் திருப்த்திகரமான சேவையினைபூர்த்திசெய்து நிரந்தரமாக்கப்பட்ட சுங்கப் பரிசோதகர் தரம் 1 ஐச் சேர்ந்தோர்கள்.

இவர்களில் பின்வரும் தகைமைகளைக் கொண்டவர்களைக் கொண்டு சுங்க உதவி அத்தியட்சகர் தரம் 11ஆம் பதவியில் தற்போதுள்ள வெற்றிடங்களில் 15% நிரப்பப்படும்.

தொழில் சார் தகைமைகள் :

I. விண்ணப்ப முடிவுத்திகதியன்று முன்னுள்ள 5 வருட காலப்பகுதியில் முனைப்பானதும் திருப்த்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதுடன் அக்காலப்பகுதியில் சகல சம்பள ஏற்றங்களையும் உழைத்திருத்தலும் வேண்டும்.
II. அங்கீகரிக்கப்பட்ட செயலாற்று மதிப்பீட்டு நடைமுறைத் திட்டத்திற்கேற்ப செயலாற்று மதிப்பீட்டு மட்டமானது சராசரி அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்தில் இருத்தல் வேண்டும்.
III. தொடர்புபட்ட வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பமானது இந்த அறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கிணங்க ஏ4 அளவிலான தாளின் இரு பக்கத்திலும் தயாரிக்கப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பத்தில் 1 தொடக்கம் 9 வரையான தலைப்பு இலக்கங்கள் முதல் பக்கத்திலும் மீதியானவை மறுபக்கத்திலும் அமையுமாறு தயாரித்தல் வேண்டும். பரீட்சை அறிவித்தலில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கிணங்க விண்ணப்பப்படிவம் விண்ணப்பதாரியினால் பூர்திசெய்யப்பட்டது என்பதனை உறுதிப்படுத்துவது பரீட்சார்த்தியினது பொறுப்பாகும் என்பதுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பிரதியொன்றினை தம்முடன் வைத்துக்கொள்வது பயனுள்ளதுமாகும். சிங்கள மற்றும் தமிழ் மொழி மூல மாதிரி விண்ணப்பங்களில் பரீட்சையின் தலைப்பானது ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். உரியமுறையில் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் அவர்களது பணிப்பகத்தின் தலைவர்கள் ஊடாக 04.08.2017 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ சுங்கத் திணைக்களத்தின் மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகம் (மனித வளம்) அவர்களுக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

பரீட்சைக் கட்டமாக ரூபா 500.00 வினை ஏதாவது தபால்/உப தபால் அலுவலகத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் 2003-02-13ஆம் இலக்க வருமான தலைப்பின் கீழ் வரவு வைப்பதற்காக செலுத்துதல் வேண்டும். பற்றுச்சீட்டானது விண்ணப்பத்தின் குறித்த இடத்தில் ஒட்டப்படல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பதாரர்கள் பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை தம்மிடம் வைத்துக்கொள்வது பயனுள்ளதாகும். இக்கட்டணமானது எச்சந்தர்ப்பத்திலும் மீள செலுத்தப்படமாட்டாது. பரீட்சைக் கட்டணம் தொடர்பில் காசுக்கட்டளைகள் அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

02. இப்பரீட்சையானது எழுத்துப் பரீட்சை மற்றும் பொது நேர்முகப் பரீட்சை ஆகிய இரு பகுதிகளைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு பரீட்சைக்குமான புள்ளிகள் மற்றும் ஒதுக்கப்பட்டுள்ள நேரம் வருமாறு :

**பகுதி 1**

| எழுத்துப் பரீட்சை | புள்ளிகள் |
|---|---|
| சுங்க நடைமுறைகள் (2 மணித்தியாலங்கள்) | 100 |
| எளிய கணிதம் (01 மணித்தியாலம்) | 100 |

**பகுதி 11**

பொது நேர்முகப் பரீட்சை (புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது)
(குறித்த இப்பதவிக்குரிய ஆட்சேர்ப்புக்கான ஆகக்குறைந்த தகைமைகளை பரீட்சார்த்திகள் கொண்டுள்ளனரா என்பதனைப் பரீட்சித்தல்)

03. இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர்கள் சகல பரீட்சையினையும் ஒரு மொழியிலேயே தோற்ற வேண்டும் என்பதுடன் அம்மொழியானது அவர்கள் தற்போதுள்ள சேவைக்கு உள்வாங்குவதற்கு தகுதிபெற்றதாகவும் இருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் பரீட்சையின் மொழியினை மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேற்றினை வெளியிடல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் முடிவே இறுதியானதாகும்.

04. இப்பரீட்சையின் பாடங்களது பாடத்திட்டமானது வருமாறு :

பாடத்திட்டம் : சுங்க நடைமுறைகள்

1.
அ. கடல் மார்க்க/ஆகாய மார்கமான சரக்குகளை ஏற்றுதல், இறக்குதல், களஞ்சியப்படுத்துதல் மற்றும் வெளியாக்குதல்
ஆ. இறக்குமதி களஞ்சியசாலையொன்றில் பொறுப்பாகவுள்ள உதவி சுங்க அத்தியட்சகர் தரம் 11 அவர்களது கடமைகள்.
இ. நீலப் புத்தகத்தினை பூர்த்திசெய்தல்
ஈ மதுபான களஞ்சியசாலையில் பொறுப்பாகவுள்ள உதவி சுங்க அத்தியட்சகர் தரம் 11 அவர்களது கடமைகள்.

2. ஏற்றுமதி

அ. தரையிறங்குவதற்காகப் பெறப்பட்ட சரக்கு தொடர்பில் பின்பற்றப்படும் நடைமுறை
ஆ. ஏற்றுமதி விபரங்களை நுண்ணாய்வு செய்தல்
இ. இருப்புக் கையேட்டினை பேணுதல

3. மாற்றி ஏற்றல் சரக்கு

அ. கடல் மார்க்கப் பொருட்கள் தொடர்பிலான பொதியிலடைக்கப்பட்ட சரக்கு (stuffing) மற்றும் பொதியிலடைக்கப்படாத சரக்கு (De-stuffing)
ஆ. மாற்றி ஏற்றல் பொருட்பட்டியல்களை தயாரித்தல்
இ. கரையோர கப்பல் சரக்கு

4. பிணைப்படுத்தப்பட்ட களஞ்சியசாலைகளுடன் தொடர்புபட்ட வெளியாக்கல் செயல்முறை

5. பொது –

- மீளளிப்புகளை சான்றுபடுத்துதல் தொடர்பிலான மீளளிப்புகள் மற்றும் நிபந்தனைகள்
- தீர்வை மீளளிப்புக்கு வரையறுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்
- மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் தடைசெய்யப்பட்ட பொருட்களது அட்டவணை (நாட்டுக்குள் கொண்டுவரல்

மற்றும் நாட்டிலிருந்து கொண்டு செல்லல் தொடர்பிலானவை)

- பிரகடணப்படுத்தாத சரக்குகள், பிளையான பிரகடணம் மற்றும் பொருட்களது பெறுமதியினை குறைத்து மதிப்பிடல் ஆகியவை தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைக்காக சுங்கக் கட்டளைச்சட்டத்தினால் வழங்கப்படும் அமுல்படுத்தல் அதிகாரங்கள்
- பரிசோதனை செய்தல்/ தேடுதல் மற்றும் தடுப்புக்காவலில் வைத்தல் என்பவை தொடர்பில் சுங்கக் கட்டளைச்சட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ள நடைமுறைகள்
- சட்டரீதியற்ற முறையில் இறக்குமதி செய்தல் மற்றும் ஏற்றுமதி செய்தல் என்பவை தொடர்பில் சுங்கக் கட்டளைச்சட்டத்தில் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் அலுவலர்களது கடமைகளுடன் தொடர்புபட்ட சகல திணைக்களக் கட்டளைகள்

05. எளிய எண்கணித/ அடிப்படைக் கணித வினாத்தாளுக்கான பாடத்திட்டம் பின்வருவனவற்றினை கொண்டிருக்கும்:

இவ்வினாத்தாள் கூட்டல், கழித்தல், பெருக்குதல் மற்றும் வகுத்தல் போன்ற எண்கணித செயல்பாடுகளில் பரீட்சார்த்தியின் திறமையினையும் கணித வினாக்களை தீர்க்கும் வேகத்தையும் பரீட்சிக்கும் வகையிலும் மற்றும் பரீட்சார்த்தியின் கணித மற்றும் தர்க்கரீதியிலான அறிவினைப் பரீட்சிக்கும் வகையிலும் அமையும்.

06

6.1 ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் ஆகக்குறைந்தது 40% புள்ளிகளை பெறுகின்ற (சுங்க நடைமுறைகள் மற்றும் எளிய கணிதம்) அல்லது இரண்டு வினாப்பத்திரங்களிலும் மொத்தமாக 100 புள்ளிகளையோ அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளையோபெறுகின்ற பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

6.2 பரீட்சையின் பெறுபேறு :

மேலே 6.1 ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறாக வெற்றிகரமான பரீட்சார்த்திகளது பெயர்களடங்கிய பெறுபேற்றுப் பட்டியல் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு பரீட்சைகள் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்படும். பரீட்சைகள் திணைக்களம் பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளதும் பெறுபேற்றினை தபாலிலோ அல்லது www.results.exams.gov.lk எனும் அலுவலக வெப் தளத்தினூடாக வெளியிடும்.

07.

7.1 வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்திசெய்துள்ள நபர்களினால் விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன எனும் ஊகத்தின் பேரில், விண்ணப்பங்களை சமர்ப்பித்த சகல விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வினியோகிக்கப்படும். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை வினியோகிக்கப்பட்டதும் பரீட்சைத் திணைக்களம் அது தொடர்பாக பத்திரிகை அறிவிப்பிபான்றினை வெளியிடும். அவ் அறிவித்தல் வெளியாகி இரண்டு அல்லது மூன்று நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அப்போது விண்ணப்பதாரியின் முழுப்பெயர். விலாசம். தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர் என்பன குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்பின் வெளிப்பிரதேசத்தில் வசிப்பவராயின், மேலே குறிப்பிட்ட விடயங்களுடன் அனுமதி அட்டை அனுப்புவதற்கான பெக்ஸ் இலக்கம், குறிப்பிட்ட உங்களது கோரிக்கை